සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

| | | | |
|---|---|---|---|
| ඉතිහාසය II (I කොටස)<br>வரலாறு II (பகுதி I)<br>History II (Part I) | 25-A T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

**இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை**

சுட்டெண் : ...............................

**அறிவுறுத்தல்கள்:**

* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்தில்** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமைய குறிப்பிடுக.**
* **இவ்வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி **I** இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி **II** இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

## பகுதி I

● **1** முதல் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் **ஒன்று** மற்றவையோடு **பொருந்தாது.** பொருந்தாத அப்பெயரைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** இடுக.

1. (1) கோதாவரி (2) கிருஷ்ணா (3) நர்மதா
   (4) பெண்ணாறு (5) காவேரி (......)

2. (1) இந்து-கிரேக்கர் (2) சகர் (3) பார்த்தியன்
   (4) மைத்ரிகர் (5) குஷாணர் (......)

3. (1) சாகுந்தலம் (2) இரத்தினாவலி (3) மேகதூதம்
   (4) ரகுவம்சம் (5) ரிதுசம்ஹாரம் (......)

4. (1) வியாக்கிரராஜர் (2) மகேந்திரகிரி (3) உக்கிரசேனன்
   (4) விஷ்ணுகோபன் (5) உருத்திரதாமன் (......)

5. (1) தனேஸ்வர் (2) மாமல்லபுரம் (3) காஞ்சிபுரம்
   (4) தஞ்சாவூர் (5) கங்கை கொண்ட சோழபுரம் (......)

6. (1) பார்ருத் (2) சாஞ்சி (3) அமராவதி
   (4) சோமநாத் (5) சாரநாத் (......)

7. (1) கால்ஸி (2) பாடலிபுத்திர (3) ஷாபஸ்கர்கி
   (4) ஜௌகத (5) தௌலி (......)

8. (1) தமிழ் (2) கன்னடம் (3) தெலுங்கு
   (4) மராட்டி (5) மலையாளம் (......)

9. (1) இந்திரன் (2) மித்திரன் (3) இராமர்
   (4) வருணன் (5) அக்கினி (......)

10. (1) சங்குதாரோ (2) மொஹெஞ்சோதாரோ (3) ஹரப்பா
    (4) கொட்டிஜி (5) சுப்பாரக (......)

[பக். 2 ஐப் பார்க்க

● **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன.அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

11. (1) மகதம் - பிம்பிசாரன்
(2) கோசலம் - பிரசேனஜித்
(3) உஜ்ஜயினி - சந்திரப்பிரத்ஜோதன்
(4) அங்க - சிசுநாகன்
(5) காசி - பிரமதத்தன் (......)

12. (1) சுங்க - புஷ்யமித்ர
(2) குஷாண - குஜுலகட்ஸஸ்
(3) பல்லவன் - சிறிமார சிறிவல்லப
(4) சாதவாகன - சிமுக
(5) பாலர் - கோபால (......)

13. (1) தொலெமி - கிரேக்கர்
(2) பிளினி - பாரசீகர்
(3) தாராநாதர் - திபெத்
(4) அல் பிரோனி - அராபியர்
(5) கியூன்-சாங் - சீனா (......)

14. (1) வலபி - மைத்ரிகர்
(2) கன்னோசி - மௌகரி
(3) வரங்கல் - காகதீயர்
(4) கலிங்கம் - சேதி
(5) வாதாபி - கொயிசாலர் (......)

15. (1) துர்கபாலர் - கணவாய்களைக் கட்டுப்படுத்துவோன்
(2) சேனாபதி - தண்டநாயகன்
(3) சுல்க அத்தியக்ஷ - சுங்கவரி அதிகாரி
(4) சமாஹர்தா - ஆட்சியாளர் நாயகம் (Collector General)
(5) அந்தர்வாசிக - அந்தப்புர அதிகாரி (......)

● **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள **ஐந்து** சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். **சரியான** சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

16.

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | கிருஷ்ணா | A | மல்வா பீடபூமி |
| (ii) | சிந்துநதி | B | இமாலயம் |
| (iii) | சம்பால் | C | தக்கிணபீடபூமி |
| (iv) | பிரம்மபுத்திரா | D | மேற்குமலைத்தொடர் |
| (v) | மகாநதி | E | திபெத் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (......)

17.

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | ஹரப்பா | A | ராவி |
| (ii) | சம்பா | B | ஜமுனா |
| (iii) | பாருகச்சம் | C | நர்மதா |
| (iv) | இந்திரப்பிரஸ்தம் | D | கங்கா |
| (v) | காவேரிப்பட்டினம் | E | காவேரி |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (......)

18.

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | சாமவேதம் | A | தேரவாதம் |
| (ii) | கடோபநிஷதம் | B | சர்வாஸ்திவாதம் |
| (iii) | சாரிபுத்ர பிரகரண | C | வேதாந்தம் |
| (iv) | மிலிந்தபஞ்ஞ | D | ஜைன |
| (v) | பகவத் சூத்திர | E | பிந்திய வேதம் |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (......)

[பக். 3 ஐப் பார்க்க

19.

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | மும்முடி கொண்ட | A | பிந்துசாரன் |
| (ii) | அமித்திர காத | B | அசோகன் |
| (iii) | சகல உத்தராபதநாத | C | முதலாம் இராஜேந்திர சோழன் |
| (iv) | கவிராஜன் | D | சமுத்திரகுப்தன் |
| (v) | தேவானாம்பிரிய | E | ஹர்ஷவர்த்தன |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (……)

20.

| X | | Y | |
|---|---|---|---|
| (i) | பிரியதர்ஷிகா | A | பாரவி |
| (ii) | தசகுமாரசரிதம் | B | ஹர்ஷவர்த்தன |
| (iii) | ஹர்சசரித | C | காளிதாசர் |
| (iv) | குமாரசம்பவம் | D | பாணபட்டர் |
| (v) | கிராதார்யுனியம் | E | தண்டி |

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (……)

● **21** முதல் **25** வரையுள்ள எல்லா வினாக்களின் சரியான விடையினைத் தெரிந்து, அதன் **இலக்கத்தினை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

21. கன்னோசிக்கருகிலுள்ள நதியின் பெயர் யாது ?
(1) கங்கை (2) யமுனை (3) நர்மதா (4) துங்கபத்திரை (5) பிரம்மபுத்திரா (……)

22. லிச்சவி கூட்டு அரசின் தலைநகரம் யாது ?
(1) குசிநார (2) பாவா (3) சாகேத (4) வைசாலி (5) மிதிலை (……)

23. கலிங்கத்தை மகதத்தோடு இணைத்தவன் யார் ?
(1) சந்திரகுப்த மோரியன் (2) பிந்துசாரன் (3) அசோகன்
(4) குணாளன் (5) பிருகத்ரதன் (……)

24. ராஷ்டிரகூட வம்சத்து முதலரசன் எவன் ?
(1) முதலாம் கிருஷ்ணன் (2) தந்திதுர்க்கன் (3) விந்தியசக்தி
(4) துருவன் (5) முதலாம் சாதகர்ணி (……)

25. "மதுரை கொண்ட" என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட சோழ அரசன் யார் ?
(1) விஜயாலயன் (2) முதலாம் ராஜராஜன்
(3) முதலாம் ராஜேந்திரன் (4) முதலாம் ஆதித்தன்
(5) முதலாம் பராந்தகன் (……)

● **26 - 30** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

26. **கங்கை - யமுனை சமவெளியின் செல்வாக்கு**
(1) மண் வளத்தினாற் செல்வம் கொழித்தது
(2) வலிய பேரரசுகள் அமைந்தமை
(3) மிகுந்தளவில் கனிப்பொருள்கள் உள்ளமை
(4) கலை, கட்டடக்கலை, இலக்கியம் ஆகியவற்றில் முன்னேற்றம்
(5) இப்பிரதேசத்தினுடைய முக்கியத்துவத்தை முதன் முதலாக உணர்ந்த அரசன் அசோகன் ஆவான் (……)

27. **சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி பற்றிய வேறுபட்ட கருத்துகள்**
(1) மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா ஆகியவற்றுக்கிடையில் ஏற்பட்ட போட்டி
(2) வெள்ளப்பெருக்கு
(3) காலநிலை மாற்றங்கள்
(4) வனங்கள் அழிக்கப்பட்டமை
(5) வெளிநாட்டார் படையெடுப்பு (……)

[பக். 4 ஐப் பார்க்க

1111

**28. மகா அலெக்ஸாண்டர்**

(1) அவன் கி.மு. 326 இல் கைபர் கணவாய் மூலம் வடமேற்கு இந்தியா மீது படையெடுத்துச் சென்றான்.
(2) கங்கை வரை மகா அலெக்ஸாண்டர் தனது படைகளுடன் சென்றான்.
(3) வியஸ் நதிவரை மட்டுமே மகா அலெக்சாண்டரின் ஆட்சி ஏற்பட்டிருந்தது.
(4) அலெக்ஸாண்டர் திரும்பிச் சென்றபின் செலூகஸ் நிக்கேற்றர் வடமேற்கு இந்தியாவில் ஆட்சி அதிகாரம் பெற்றான்.
(5) அலெக்ஸாண்டர் வடமேற்கு இந்தியா மீது படையெடுத்த காலத்தில் தனநந்தன் மகத மன்னனாக விளங்கினான். (……)

**29. அசோக சாசனங்கள்**

(1) இந்தியாவில் முதன் முதலாக மகா அலெக்சாண்டரினால் சாசனங்களை எழுதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
(2) அசோக சாசனங்கள் இந்தியாவில் மட்டுமன்றி ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன.
(3) அசோகனின் பெரும்பாலான சாசனங்கள் பிராமி வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன.
(4) அசோக சாசனங்களில் சில கிரேக்க, அரமிய வரிவடிவங்களிலும் எழுதப்பட்டன.
(5) இச்சாசனங்கள் மூலம் அசோகன் மக்களுக்கு நேரடியாக அறிவுரைகளை வழங்கினான். (……)

**30. சகர்**

(1) சகர் எனப்படுவோர் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஒரு நாடோடிக் குழுவினராவர்.
(2) சகர் போலான் கணவாயின் மூலம் இந்தியாவை அடைந்தனர்.
(3) சகர் ஆட்சியின் கீழ் அமைந்த மாகாணங்கள் சத்திரப் என்று அழைக்கப்பட்டன.
(4) உஜ்ஜயினியில் அரசு புரிந்த உருத்திரதாமன் சகர் அரசர்களின் முக்கியமான ஒருவன்.
(5) சகர்களை சமுத்திர குப்தன் தோற்கடித்தான். (……)

● **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. **அவற்றுள் ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ……………… **1** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ……………… **2** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ……………… **3** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ……………… **4** எனவும்

**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரியாயின் ……………… **5** எனவும் **அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி |

**31. இருக்கு வேதகாலம்**

(A) வர்ணமுறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை.
(B) யக்ஞங்களிற் பங்கு கொள்வதற்குப் பெண்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை.
(C) வருணன் இந்திரன் ஆகியோரே இரு பிரதானமான கடவுள்கள்.
(D) வேள்விகளைச் செய்து கடவுள்களை வழிபடுவது வழிபாட்டு முறைகளில் ஒன்று. (……)

**32. சுங்கர்**

(A) மௌரிய வம்சத்து இறுதி அரசனைக் கொன்று சுங்கர் அதிகாரம் பெற்றனர்.
(B) பாடலிபுரம் சுங்கரின் இராசதானியாகும்.
(C) சுங்கரின் ஆட்சிக்காலத்திலே சாஞ்சி, பார்குத், புத்தகாயா போன்ற பௌத்த சமயத் தலங்கள் சிறப்புப் பெற்றிருந்தன.
(D) சுங்கர் காலத்தில் பதஞ்சலி வாழ்ந்தார். (……)

**33. இந்து - கிரேக்கர்**

(A) புராதன இந்திய இலக்கியங்கள் கிரேக்கரை யவனர் என்று குறிப்பிடுகின்றன.
(B) டெமெற்றியஸ், மெனாந்தர் ஆகியோரே இந்து-கிரேக்க மன்னரில் முதன்மையானவர்கள்.
(C) வடமேற்கு இந்தியாவில் இந்து-கிரேக்கரின் ஆட்சியை மகா அலெக்ஸாண்டர் அழித்தான்.
(D) இந்து-கிரேக்கர் பௌத்த சமயத்தை மேற்கிலுள்ள நாடுகளுக்கு அறிமுகம் செய்தனர். (……)

**34. சாதவாகனர்**

(A) சாதவாகனர் வட இந்தியாவிலிருந்து வந்தனர்.
(B) மோரியர் ஆதிக்கம் வீழ்ச்சியுற்ற பின்பு தக்கிணத்திலே அவர்கள் ஆதிக்கம் பெற்றனர்.
(C) சாதவாகனரைப் பிராமணர் என்று கருதினார்கள்.
(D) சாதவாகனர் வம்சத்தை இரண்டாம் சந்திரகுப்தன் அழித்தான். (……)

[பக். 5 ஐப் பார்க்க

35. **ஹர்ஷவர்த்தனன்**
(A) தனேஸர் அரசனான ராஜ்யவர்த்தனன், ஹர்ஷ வர்த்தனனின் சகோதரன் ஆவான்.
(B) ஹர்ஷவர்த்தனனை 'சீலாதித்ய' என்று குறிப்பிட்டனர்.
(C) ஹர்ஷவர்த்தனனின் ஆட்சிக்காலம் பற்றிய விபரங்களை பாகியான் குறிப்பிடுகின்றார்.
(D) ஹர்ஷவர்த்தனன் கன்னோசி மௌகரி வம்சத்தின் ஸ்தாபகன் ஆவான். (......)

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும், **முதலாம்** கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|
| 36. 'ராஜதரங்கிணி' கல்ஹணர் எழுதிய நூலாகும். | 'ராஜதரங்கிணி' இந்திய வரலாறு பற்றிய பிரதான வரலாற்று நூலாகக் கொள்ளப்படுகின்றது. | (......) |
| 37. சந்திரகுப்த மோரியனின் தாயார் நந்த வம்சத்து இளவரசி | நந்த வம்சத்து இறுதி அரசனாகிய தனநந்தனைக் கொலை செய்தபின் சந்திர குப்த மோரியன் ஆட்சி அதிகாரம் பெற்றான். | (......) |
| 38. உருத்திரதாமன் யுன்கார் சாசனத்தை நிறுவினான். | இதுவே இந்தியாவின் முதலாவது இராஜ சாசனம் என்று கொள்ளப்பட்டது. | (......) |
| 39. வாதாமி பல்லவரின் தலைநகராகும். | பல்லவர் வம்சத்து சிம்ம விஷ்ணு 'மத்தவிலாச பிரகஸன' என்ற சிறப்புப் பெயர் கொண்டவன். | (......) |
| 40. இரண்டாம் புலிகேசி ஹர்ஷவர்த்தனனைத் தோற்கடித்தான். | இந்தத் தோல்விக்குப் பின்பு நர்மதா நதி ஹர்ஷவர்த்தனனுடைய பேரரசின் தென் எல்லையாகியது. | (......) |

**

[பக். 6 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-A T II

## இந்திய வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி. 1206 வரை

**அறிவுறுத்தல்கள்:**

※ **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** ஒன்று வழங்கப்படும்.)

### பகுதி II

**1.** மேலே குறிக்கப்பட்ட **எல்லா இடங்களையும்** உமக்கு வழங்கப்பட்ட புறவுருவப்படத்திலே **குறித்து, பெயரிட்டு** அவற்றில் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் **சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள்** எழுதுக.

(i) சுலைமான் மலைகள் (ii) பரோடா கணவாய் (iii) உஜ்ஜயினி (iv) மதுரா
(v) தாமிரலிப்தி (vi) கிருஷ்ணா நதி (vii) ஹரப்பா (viii) மதுரை

*(சரியாகக் குறித்துப் பெயரிட்ட ஒவ்வொன்றுக்கும் **ஒவ்வொரு** புள்ளி; சிறுகுறிப்பொன்றுக்கு **05** புள்ளிகள்)*

**2.** புராதன இந்திய வரலாற்றில் புவியியல் காரணிகள் செலுத்திய செல்வாக்கினைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

**3.** "சிந்து வெளி நாகரிகம் ஒரு நகரமையமான நாகரிகமாகும்."

(i) சிந்து வெளி நாகரிகத்தின் பிரதானமான **இரண்டு** நகரங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) சிந்துவெளி நாகரிகம் நிலவிய பிரதேசத்திலே காணப்பட்ட **இரண்டு** பிரதானமான தொல்பொருட் சின்னங்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) சிந்துவெளி மக்களது பொருளாதார நடவடிக்கைகளைச் சுருக்கமாக விபரிக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) மேலே தரப்பட்ட குறிப்பினை ஒப்புக் கொள்ளுவீரா ? காரணங்கள் தருக. *(07 புள்ளிகள்)*

**4.** பிந்திய வேதகாலத்து அரசியல், பொருளாதார நிலைகளின் பிரதான அம்சங்களை வர்ணிக்குக. *(14 புள்ளிகள்)*

**5.** அசோகனுடைய தர்மக் கொள்கையினை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

**6.** "இந்திய வரலாற்றிலே குப்தப் பேரரசர் காலம் உன்னத பண்பாட்டு வளர்ச்சிக் காலமாகும்."

(i) குப்த வம்சத்து முதல் மன்னர் என்று கருதப்படுபவர் யார் ? *(01 புள்ளி)*

(ii) சமுத்திரகுப்தன் தோற்கடித்த நாகமன்னர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) குப்தப் பேரரசின் உன்னத வளர்ச்சிக் காலத்தில், அதில் அடங்கியிருந்த நிலப்பரப்பினைப் பற்றிச் சுருக்கமான ஒரு விளக்கவுரை எழுதுக. *(03 புள்ளிகள்)*

(iv) மேலே குறித்த கூற்றை ஒப்புக் கொள்வீரா எனக் காரணங்களுடன் ஆராய்க. *(08 புள்ளிகள்)*

**7.** இரண்டாம் வரகுணவர்மன் காலம் முடியும்வரை பாண்டியப் பேரரசு வளர்ச்சியடைந்த பிரதான கட்டங்களை எடுத்துக்காட்டுக. *(14 புள்ளிகள்)*

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(i) புராதன இந்தியாவின் கண இராச்சியங்கள்
(ii) சுங்க வம்சம்
(iii) சங்க இலக்கியம்
(iv) சிந்துப் பிரதேசத்தில் அராபியரின் கைப்பற்றல்கள்

*(ஒவ்வொன்றுக்கும் 07 புள்ளிகள்)*

**9.** **(A)** பகுதிக்கு **அல்லது (B)** பகுதிக்கு மாத்திரம் விடை எழுதுக.

**(A)** சோழரது மாகாண, ஊராட்சி முறைகளின் பிரதான இயல்புகளை ஆராய்க. *(14 புள்ளிகள்)*

**(B)** வங்காளத்துப் பாலர்களின் அரசியல், பண்பாட்டுச் சாதனைகளைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

***

0001096

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

ඉතිහාසය II
வரலாறு II
History II

25-A T

ප්‍රශ්න අංකය
வினா இல.
Question No. 1

විභාග අංකය
சுட்டெண்
Index No. ....................................

